செ.வெ. எண்: 632

6.8.08

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு பனைத் தொழிலாளர் நல வாரிய மூன்றாவது கூட்டம் 6.8.2008 புதன்கிழமை காலை 11 மணி அளவில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்றது.

வாரியத் தலைவர் திரு அ. குமரி அனந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொழிலாளர் ஆணையர் திரு அசுகுமாரன், தமிழ்நாடு பனைவளர்ச்சிக் கழகத்தின் கண்காணிப்பாளர் திரு தர்மராஜன், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் கழக இணை இயக்குநர் திரு சிவகுமார், பனைத் தொழிலாளர் நல வாரியச் செயலாளர் திரு சம்பத்குமார் மற்றும் அலுவலர்கள், வாரிய உறுப்பினர்கள், திரு வரதராசன், திரு கார்மேகம், திரு சிவலிங்கம், திரு அந்தோணி வியாகப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்ற கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பின் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி விவாதிக்கப்பட்டு, நிலுவையில் உள்ள கோரிக்கைகள் யாவும் தொடர்புடைய துறைகள் விரைந்து நடவடிக்கை எடுத்துத் தர வேண்டும் என்று கேட்கப்பட்டது.

பனைத் தொழிலாளர்கள் இறக்கும் பதநீரை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்று ஏற்கனவே நிறைவேற்றிய தீர்மானம் மீண்டும் வலியுறுத்தி நிறைவேற்றப்பட்டது.

கடம்பத்தூர், மதுரை மேலப்பட்டி, திண்டுக்கல் கோவிலூர், சேலம் சங்ககிரி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் அரசே நேரடியாகப் பதநீரைக் கொள்முதல் செய்து பதப் படுத்தி மக்களுக்கு கொடுப்பதைப் போல் தமிழ்நாடு முழுவதும் கொள்முதல் செய்து பதப்படுத்தி விற்பனை செய்ய வேண்டுமென்றும், இப்போதுள்ள கொள்முதல் விலையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும், இத்திட்டத்தை விரைந்து நிறைவேற்ற மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு தா.மோ.அன்பரசன் அவர்களையும், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு ராமச்சந்திரன் அவர்களையும் மிக விரைவில் சந்தித்துப் பேசுவது எனவும் தீர்மானிக்கப் பட்டது.

----

[signature] 6.8.08
தலைவர்
பனைத் தொழிலாளர்
நல வாரியம்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9